# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | மெய்யெண் தொகுப்பு | 03 |
| 2 | சுருக்குதல் | 07 |
| 3 | மீ.சி.ம மற்றும் மீ.பொ.வ | 09 |
| 4 | சதவீதம் | 10 |
| 5 | லாபம், நஷ்டம் மற்றும் தள்ளுபடி | 11 |
| 6 | சராசரி | 12 |
| 7 | விகிதம் மற்றும் விகிதசமம் | 13 |
| 8 | தனிவட்டி | 14 |


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 9 | கூட்டுவட்டி | 14 |
| 10 | நேரம் மற்றும் வேலை | 15 |
| 11 | குழாயும், தண்ணீர் தொட்டியும் | 16 |
| 12 | காலம், தூரம் மற்றும் வேகம் | 16 |
| 13 | வயது கணக்கீடுகள் | 17 |
| 14 | அளவியல்<br>1. பரப்பு<br>2.கனஅளவு | 18 |
| 15 | நிகழ்தகவு | 25 |
| 16 | புள்ளியியல் | 26 |
| 17 | இயற்கணிதம் | 27 |

# 1.மெய்யெண்களின் தொகுப்பு (Number System)

☞ அனைத்து எண்களின் பண்புகளையும் அடிப்படைச் செயல்பாடுகளையும் இப்பகுதி விளக்குகிறது.

> “அறிவியலின் அரசி கணிதம்
>
> கணிதத்தின் அரசி எண்முறையினம்”

எண்களின் வகைபாடு:-




**மெய்யெண்கள் (Real Numbers):**

☞ விகிதமுறு மற்றும் விகிதமுறா எண்களையே மெய்யெண்கள் என்பர்.

- எ.கா: $\frac{7}{9}$, $\sqrt{2}$, $\sqrt{5}$, $\pi$

**இயல் எண்கள் (Natural Numbers):**

☞ $1, 2, 3 \ldots$ என்று எண்ணக் கூடிய எண்கள் இயல் எண்கள் எனப்படும்.

- $\mathrm{N} = \{1, 2, 3, \ldots.\}$

**முழுஎண்கள் (Whole Numbers):**

☞ பூச்சியத்துடன் இயல் எண்களைச் சேர்க்க கிடைப்பது முழு எண்கள்.

- $\mathrm{W} = \{0, 1, 2, 3 \ldots\}$

**முழுக்கள் (Intergers):**

☞ குறையெண்கள் மற்றும் முழு எண்களின் தொகுப்பே முழுக்கள் எனப்படும்.

- $Z = \{\ldots -3, -2, -1, 0, 1, 2, 3 \ldots\}$
- மிகைமுழுக்கள் $= \{1, 2, 3, \ldots\}$
- குறை முழுக்கள் $= \{-1, -2, -3, \ldots\}$

**ஒற்றைப்படை எண்கள் (Odd Numbers):**

☞ இயல் எண்களில் 2 ஆல் வகுபடாத எண்கள்.

- எ.கா: $\{1, 3, 5, 7, 9 \ldots\}$

இரட்டைப்படை எண்கள் (**Even Numbers):**

- ☞ இயல் எண்களில் 2 ஆல் வகுபடக்கூடிய எண்கள்.
  - ⌘ எ.கா: $\{2, 4, 6, 8 \dots\}$

பகு எண்கள் **(Composite Numbers):**

- ☞ இரண்டுக்கும் மேற்பட்ட வகுத்திகளைக் கொண்ட எண்கள்
  எகா: 4, 6, 8, 9,…

பகா எண்கள் **(Prime Numbers):**

- ☞ இரண்டு வகுத்திகளை மட்டுமே கொண்ட எண்கள்.
  எ.கா 2, 3, 5, 7, 11…
- ☞ 1 முதல் 100 வரை 25 பகா எண்கள் உள்ளன. அவைகள் முறையே,

$$\begin{Bmatrix} 2, 3, 5, 7, 11, 13, 17, 19, 23, 29, 31, 37, 41, 43, 47, 53, \\ 59, 61, 67, 71, 73, 79, 83, 89, 97, .. \end{Bmatrix}$$

- ☞ 1 என்பது பகு எண்ணும் அல்ல, பகா எண்ணும் அல்ல.
- ☞ மொத்த எண்கள் = பகு எண்கள் + பகா எண்கள் + 1

சார்பகா எண்கள் **(CO-Prime Numbers):**

- ☞ இரண்டு இயல் எண்களின் மீ.பொ.வ 1 எனில் அந்த எண்கள் சார்பகா எண்கள் எனப்படும்.
  எ.கா: (7, 9), (15, 16), (2, 7)

விகிதமுறு எண்கள் **(Rational Numbers):**

- ☞ இரு முழுக்களின் விகிதம் விகிதமுறு எண் எனப்படும். விகிதமுறு எண்ணின் வடிவம் $\frac{p}{q}$, மேலும் $q \neq 0$.

  எ.கா: $\frac{4}{7}, -\frac{2}{3}, \frac{3}{5}$
- ☞ விகிதமுறு எண்களின் கூட்டல் சமனி 0
- ☞ விகிதமுறு எண்களின் பெருக்கல் சமனி 1

விகிதமுறா எண்கள் **(Irrational Numbers):**

- ☞ முடிவுறா மற்றும் சுழல் தன்மையற்ற தசம விரிவினைக் கொண்ட எண் விகித முறா எண் எனப்படும்.
- ☞ $\frac{p}{q}$ வடிவில் எழுத முடியாது

  எ.கா: $\sqrt{2}, \sqrt{3}, \sqrt{5}, \pi, e, \dots \quad (e = 2..718281 \dots)$

# வகுபடும் தன்மை (Divisibility)

**2 ஆல் வகுபடும் தன்மை:**

- ☞ ஓர் எண்ணின் கடைசி இலக்கம் 0, 2, 4, 6, 8 என்ற எண்களாக இருந்தால் மட்டுமே 2 ஆல் வகுபடும்.

**4 ஆல் வகுபடும் தன்மை:**

- ☞ ஓர் எண்ணின் கடைசி இரண்டு இலக்கங்கள் 4ன் மடங்காக இருந்தால் மட்டும் அந்த எண் 4 ஆல் வகுபடும்.

**8 ஆல் வகுபடும் தன்மை:**

- ☞ ஓர் எண்ணின் கடைசி மூன்று இலக்கங்கள் 8ன் மடங்காக இருக்கும் எனில் அந்த எண் 8 ஆல் வகுபடும்.

**5 ஆல் வகுபடும் தன்மை:**

- ஓர் எண்ணின் கடைசி இலக்கம் 0 அல்லது 5 ஆக இருந்தால் மட்டும் அந்த எண் 5 ஆல் வகுபடும்.

**10 ஆல் வகுபடும் தன்மை:**

- ஓர் எண்ணின் கடைசி இலக்கம் 0 ஆக இருந்தால் மட்டும் அந்த எண் 10 ஆல் வகுபடும்.

**3 ஆல் வகுபடும் தன்மை:**

- ஓர் எண்ணின் இலக்கங்களின் கூடுதல் 3ன் மடங்காக இருந்தால் மட்டும் அந்த எண் 3 ஆல் வகுபடும்.

**9 ஆல் வகுபடும் தன்மை:**

- ஓர் எண்ணின் இலக்கங்களின் கூடுதல் 9ன் மடங்காக இருக்கும் எனில் அந்த எண் 9 ஆல் வகுபடும்.

**6 ஆல் வகுபடும் தன்மை:**

- 2 மற்றும் 3 ஆல் வகுபடும் எண் 6 ஆல் வகுபடும்.

**7 ஆல் வகுபடும் தன்மை:**

- ஓர் எண்ணின் கடைசி இலக்கத்தின் இரு மடங்கு மற்றும் மற்ற எண்களுக்கு உள்ள வேறுபாடு 0 அல்லது 7ன் மடங்காக இருக்குமாயின் அந்த எண் 7 ஆல் வகுபடும்.

**11 ஆல் வகுபடும் தன்மை:**

- ஓர் எண்ணின் ஒற்றை இலக்கங்களின் கூடுதலுக்கும் இரட்டை இலக்கங்களின் கூடுதலுக்கும் உள்ள வித்தியாசம் 0 அல்லது 11-ன் மடங்காகவோ இருந்தால் அந்த எண் 11 ஆல் வகுபடும்.

**வகுத்தல் விதி:**

| வகுபடும் எண் = | (வகுத்தி × | ஈவு) + | மீதி |
|---|---|---|---|
| (Dividend) | (Division) | (Quotient) | (Remainder) |

**வகுத்திகள் (Divisors):**

- ✓ ஓர் எண்ணை மீதியின்றி வகுக்கும் எண்கள் அனைத்தும் அந்த எண்ணின் வகுத்திகள் எனப்படும்.
- ✓ எ.கா: 6 ன் வகுத்திகள் ⇒ 1, 2, 3, 6

**காரணிகள் (Factors):**

- ✓ ஓர் எண்ணின் வகுத்திகளில் 1 ஐயும், அந்த எண்ணையும் தவிர மற்ற வகுத்திகள் அனைத்தும் அந்த எண்ணின் காரணிகள் எனப்படும்.
- ✓ எ.கா: 6ன் காரணிகள் ⇒ 2, 3

"எல்லாக் காரணிகளும் வகுத்திகளே, வகுத்திகள் எல்லாம் காரணிகள் அல்ல"

## மெய்யெண்களின் தொடர்களும், தொடர் வரிசைகளும்

### கூட்டுத் தொடர் வரிசை அல்லது கூட்டு விருத்தி

### (Arithmetic Sequence or Arithmetic Progression)

**கூட்டுத் தொடர்வரிசையின் பொது வடிவம்:**

- ✓ $a, a+d, a+2d, a+3d, \ldots \quad a+(n-1)d, a+nd, \ldots$

☑ $n$ வது உறுப்பு காண: $t_n = a+(n-1)d$

- ✓ $a \Rightarrow$ முதல் உறுப்பு
- ✓ $d \Rightarrow$ பொது வித்தியாசம்
- ✓ $n \Rightarrow$ உறுப்புகளின் எண்ணிக்கை

☑ உறுப்புகளின் எண்ணிக்கை: $n = \frac{l-a}{d} + 1$

☑ கூட்டுத் தொடர் வரிசையின் முதல் $n$ உறுப்புகளின் கூடுதல்:

- ✓ $S_n = \frac{n}{2}[2a+(n-1)d]$(பொது வித்தியாசம் $d$ தரப்பட்டால்)
- ✓ $S_n = \frac{n}{2}(a+l)$ (கடைசி உறுப்பு $l$ தரப்பட்டால்)

## பெருக்குத் தொடர் வரிசை அல்லது பெருக்கு விருத்தி

## (Geometric Sequence or Geometric Progression)

**பெருக்குத் தொடர்வரிசையின் பொது வடிவம்:**

- ✓ $a, ar, ar^2, ar^3, \ldots. \quad ar^{n-1},\ ar^n, \ldots.$

☑ $n$ வது உறுப்பு காண:

- ✓ $t_n = ar^{n-1}$ ($r \Rightarrow$பொது விகிதம்)

☑ ஒரு பெருக்கு தொடர் வரிசையின் முதல் $n$ உறுப்புகளின் கூடுதல்:

- ✓ $S_n = \frac{a(r^n-1)}{r-1} (or) \frac{a(1-r^n)}{1-r} (r \neq 1)$
- ✓ $S_n = na$ ($\therefore r = 1$ எனில்)

☑ முடிவிலி எண்ணிக்கையில் உறுப்புகள் இருப்பின் கூடுதல்:

- ☛ $S_n = \frac{a}{1-r}$

**பிபோனாகி தொடர்வரிசை (Fibonacci Sequence):**

- ✓ $F_1 = F_2 = 1$ மற்றும் $F_n = F_{n-1} + F_{n-2},\ n = 3, 4, \ldots.$ என்பதிலிருந்து பெறப்படும் தொடர்வரிசை பிபோனாகி தொடர்வரிசை எனப்படும்.

இதன் உறுப்புகள் $\Rightarrow$ 1, 1, 2, 3, 5, 8, 13, 21,…

**சிறப்பு தொடர்கள் (Special Series):**

I. முதல் $n$ இயல் எண்களின் கூடுதல்:

- ☛ $1+2+3+\cdots \quad +n = \frac{n(n+1)}{2}$

II. முதல் $n$ இயல் எண்களின் வர்க்கங்களின் கூடுதல்:

- ☛ $1^2+2^2+3^2+\cdots \quad +n^2 = \frac{n(n+1)(2n+1)}{6}$

III. $1^2-2^2+3^2-4^2+\cdots$என்ற தொடரின் முதல் $2n$ உறுப்புகளின் கூடுதல்

- ☛ $S_n = -n(2n+1)(or) - \frac{n(n+1)}{2}$

IV. முதல் $n$ இயல் எண்களின் கணங்களின் கூடுதல்:

- ☛ $1^3+2^3+3^3+\cdots \quad +n^3 = \left[\frac{n(n+1)}{2}\right]^2$

V. முதல் $n$ ஒற்றைப்படை இயல் எண்களின் கூடுதல்:

- ☛ $1+3+5+\cdots \quad = n^2$

VI. முதல் $n$ ஒற்றைப்படை இயல் எண்களின் கூடுதல் (கடைசி உறுப்பு $l$ தரப்பட்டால்):

- ☛ $1+3+5+\cdots \quad +l = \left(\frac{l+1}{2}\right)^2$

VII. முதல் $n$ இரட்டைப்படை இயல் எண்களின் கூடுதல்:

- ☛ $2+4+6+\cdots \quad = n(n+1)$

**VIII.** முதல் $n$ ஒற்றைப்படை இயல் எண்களின் வர்க்கங்களின் கூடுதல்:

- $1^2 + 3^2 + 5^2 + \cdots \quad = \frac{n(4n^2-1)}{3}$

**IX.** முதல் $n$ ஒற்றைப்படை இயல் எண்களின் கணங்களின் கூடுதல்:

- $1^3 + 3^3 + 5^3 + \cdots \quad = n^2(2n^2-1)$

**X.** $a + aa + aaa + \cdots$ என்ற தொடரின் முதல் $n$ உறுப்புகளின் கூடுதல்:

- $S_n = \frac{a}{9}\left[\frac{10\,(10^n-1)}{9} - n\right]$

## 2. சுருக்குதல்(Simplification)

**சுருக்குதல் முறையில் பயன்படுத்தப்படும் விதிமுறைகள்:**


I. VBODMAS Rule
II. Surds and Indices
III. Basic Algebra Formulae
IV. Square Root and Cube Root

**I.VBODMAS Rule:**

ஒரு விரித்தலை சுருக்குவதற்கு VBODMASவிதியின் அடிப்படையில் சுருக்குகின்ற வரிசை:

**V –** என்பது Vinculum (மேற்கோட்டு அடைப்பு "¯")

**B –** என்பது Brackets




Brackets ஐ நீக்கம் செய்யும் வரிசையானது,

- ✓ $1^{st}$ ⇒ Small (Circular) Bracket '( )'
- ✓ $2^{nd}$ ⇒ Middle (Curly) Bracket '{ }'
- ✓ $3^{rd}$ ⇒ Square (Big) Bracket '[ ]'
  - **O** என்பது Of (இல், இன், மடங்கு, பங்கு)
  - **D** என்பது Division (வகுத்தல்)
  - **M** என்பது Multipication (பெருக்கல்)
  - **A** என்பது Addition (கூட்டல்)
  - **S** என்பது Subtraction (கழித்தல்)

**II.**அடுக்கு விதிகள் (**Surds and Indices**):

I. $a^0 = 1\ (a \neq 0)$
II. $a^{-m} = \frac{1}{a^m}$
III. $a^m \times a^n = a^{m+n}$(பெருக்கல் விதி)
IV. $\frac{a^m}{a^n} = a^{m-n}$(வகுத்தல் விதி)
V. $(a^m)^n = a^{m\times n}$(அடுக்கு விதி)

VI. $a^m \times b^m = (a \times b)^m$(சேர்க்கை விதி)

VII. $a^m \div b^m = \left(\frac{a}{b}\right)^m$

VIII. $\left(\frac{a}{b}\right)^{-m} = \left(\frac{b}{a}\right)^m$

IX. $(a^m)^n = (a^n)^m$

X. $\sqrt[m]{a} = a^{\frac{1}{m}}$

XI. $\sqrt[m]{a} \times \sqrt[m]{b} = \sqrt[m]{ab}$

XII. $\sqrt[m]{a} \div \sqrt[m]{b} = \sqrt[m]{\frac{a}{b}}$

XIII. $\left(\sqrt[m]{a}\right)^m = a$

XIV. $\sqrt[m]{\sqrt[n]{a}} = \sqrt[mn]{a}$

XV. $\left(\sqrt[m]{a}\right)^n = \sqrt[m]{a^n}$

**மேலும் சில முக்கிய விதிகள்:**

1. $\left(\frac{x^b}{x^c}\right)^a . \left(\frac{x^c}{x^a}\right)^b . \left(\frac{x^a}{x^b}\right)^c = 1$
2. $\left(\frac{x^a}{x^b}\right)^{a+b} . \left(\frac{x^b}{x^c}\right)^{b+c} . \left(\frac{x^c}{x^a}\right)^{c+a} = 1$

**III.இயற்கணித முற்றொருமைகள் (Basic Algebra Formulae):**

1. $(a+b)^2 = a^2 + b^2 + 2ab$
2. $(a-b)^2 = a^2 + b^2 - 2ab$
3. $(a+b)^2 + (a-b)^2 = 2(a^2 + b^2)$
4. $(a+b)^2 - (a-b)^2 = 4ab$
5. $a^2 - b^2 = (a+b)\,(a-b)$
6. $a^3 + b^3 = (a+b)(a^2 - ab + b^2)$
7. $a^3 - b^3 = (a-b)(a^2 + ab + b^2)$
8. $(a+b)^3 = a^3 + b^3 + 3ab\,(a+b)$
9. $(a-b)^3 = a^3 - b^3 - 3ab\,(a-b)$

**IV.வர்க்கமூலம் மற்றும் கனமூலம் (Square Root and Cube Root):**

- $x -$ ன் கனம் $\Rightarrow x^3$
- $x^3 -$ன் கனமூலம் $\Rightarrow \sqrt[3]{x^3} (or) (x^3)^{\frac{1}{3}} \rightarrow x$
- $x -$ன் வர்க்கம் $\Rightarrow x^2$
- $x^2 -$ன் வர்க்கமூலம் $\Rightarrow \sqrt[2]{x^2} (or) (x^2)^{\frac{1}{2}} \rightarrow x$

**1)** $\sqrt{x\sqrt{x\sqrt{x \ldots\ldots\ldots\ldots.\infty}}} = x$

**2)** $\sqrt{x\sqrt{x\sqrt{x \ldots\ldots\ldots\ldots.n}}} = x^{\frac{2^n-1}{2^n}}$

**3)** $\sqrt{x + \sqrt{x + \sqrt{x + \cdots \ldots}}} = ?$

$Soluation:$

$x = m(m+1)$ $\therefore\ ans = m + 1$

எ.கா: $\sqrt{6 + \sqrt{6 + \sqrt{6 + \cdots}}} = ?$

இங்கு $x = 6 = 2(3) = 2(2+1)$

$\therefore Ans = (2+1) = 3$

**4)** $\sqrt{x - \sqrt{x - \sqrt{x - \cdots}}} = ?$

$Solution:$

$x = m(m+1)$ $\therefore\ ans = m$

எ.கா: $\sqrt{6-\sqrt{6-\sqrt{6-\cdots}}} = ?$

இங்கு $x = 6 = 2(3) = 2(2+1)$

$\therefore Ans = 2$

**வர்க்க எண்கள் மற்றும் கன எண்கள்(Square and Cube Numbers):**

| எண்கள் $(x)$ | எண்களின் வர்க்கம் $x^2$ | ஏண்களின் கனம் $x^3$ |
|---|---|---|
| **1** | 1 | 1 |
| **2** | 4 | 8 |
| **3** | 9 | 27 |
| **4** | 16 | 64 |
| **5** | 25 | 125 |
| **6** | 36 | 216 |
| **7** | 49 | 343 |
| **8** | 64 | 512 |
| **9** | 81 | 729 |
| **10** | 100 | 1000 |
| **11** | 121 | 1331 |
| **12** | 144 | 1728 |
| **13** | 169 | 2197 |
| **14** | 196 | 2744 |
| **15** | 225 | 3375 |
| **16** | 256 | 4096 |
| **17** | 289 | 4913 |
| **18** | 324 | 5832 |
| **19** | 361 | 6859 |
| **20** | 400 | 8000 |

# 3.மீ.சி.ம மற்றும் மீ.பொ.வ (LCM & HCF)

I. **பின்னங்களின் மீ.சி.ம மற்றும் மீ.பொ.வ:**

- **பின்னங்களின் மீ.சி.ம** $= \frac{\text{தொகுதிஎண்களின்மீ.சி.ம}}{\text{பகுதிஎண்களின்மீ.பொ.வ}}$
- **பின்னங்களின்மீ.பொ.வ** $= \frac{\text{தொகுதிஎண்களின்மீ.பொ.வ}}{\text{பகுதிஎண்களின்மீ.சி.ம}}$

II. **அடுக்குகளை உடைய எண்களின் மீ.சி.ம மற்றும் மீ.பொ.வ:**

**மீ.சி.ம:**

- **அதிக அடுக்குகளை உடைய பொது மற்றும் பொது அல்லாத எண்களின் பெருக்கற்பலன்.**

**மீ.பொ.வ:**

- **குறைந்த அடுக்குகளை உடைய பொதுவான எண்களின் பெருக்கற்பலன்.**

III. இரு எண்களின் பெருக்கற்பலன்

= அந்த எண்களின் மீ.சி.ம × மீ.பொ.வ

# 4.சதவீதம் (Percentage)

☑ சதவீதம் என்பது Percentum என்ற லத்தீன் மொழி வார்த்தையின் சுருக்கம்.

☑ நூற்றுக்கு என்பது இதன் பொருள்

☑ சதவீதம் என்பது பகுதியில் 100 ஐ உடைய ஒரு பின்னம்

☑ இதன் குறியீடு '%'. உதாரணமாக $x\%$ என்பதனை $\frac{x}{100}$ என எழுதலாம்

<u>எளிய வழிமுறைகள்:</u>

- ✳ ஓர் எண்ணின் 5% $= \frac{\text{அந்தஎண்}}{20}$
- ✳ ஓர் எண்ணின் 10% $= \frac{\text{அந்தஎண்}}{10}$
- ✳ ஓர் எண்ணின் $12\frac{1}{2}\%$ $= \frac{\text{அந்தஎண்}}{8}$
- ✳ ஓர் எண்ணின் 20% $= \frac{\text{அந்தஎண்}}{5}$
- ✳ ஓர் எண்ணின் 25% $= \frac{\text{அந்தஎண்}}{4}$
- ✳ ஓர் எண்ணின் 50% $= \frac{\text{அந்தஎண்}}{2}$

| சதவீதம் (Percentage) | பின்னம் (Fraction) |
|---|---|
| 50% | $\frac{1}{2}$ |
| 25% | $\frac{1}{4}$ |
| 75% | $\frac{3}{4}$ |
| 20% | $\frac{1}{5}$ |
| 40% | $\frac{2}{5}$ |
| 80% | $\frac{4}{5}$ |
| 30% | $\frac{3}{10}$ |
| 10% | $\frac{1}{10}$ |
| 70% | $\frac{7}{10}$ |
| 90% | $\frac{9}{10}$ |
| $6\frac{1}{4}\%$ | $\frac{1}{16}$ |
| $12\frac{1}{2}\%$ | $\frac{1}{8}$ |
| $33\frac{1}{3}\%$ | $\frac{1}{3}$ |
| $37\frac{1}{2}\%$ | $\frac{3}{8}$ |
| $62\frac{1}{2}\%$ | $\frac{5}{8}$ |
| $66\frac{2}{3}\%$ | $\frac{2}{3}$ |
| $16\frac{2}{3}\%$ | $\frac{1}{6}$ |

- ✷ $x$ என்பது $y$ ஐ விட $R\%$ <u>அதிகம்</u> எனில் $y$ என்பது $x$ ஐ விட $\left(\frac{R}{100+R} \times 100\right)\%$ குறைவு.
- ✷ $x$ என்பது $y$ ஐ விட $R\%$ <u>குறைவு</u> எனில் $y$ என்பது $x$ ஐ விட $\left(\frac{R}{100-R} \times 100\right)\%$ அதிகம்.

- ஒரு பொருளின் விலை $x\%$ குறைக்கப்பட்டு அல்லது அதிகரிக்கப்பட்டாலோ, பின்பு $y\%$ குறைக்கப்பட்டு அல்லது அதிகரிக்கப்பட்டாலோ முடிவில் குறைப்பு(அ) அதிகரிப்பு சதவீதம்

$$\Rightarrow \pm x \pm y + \frac{(\pm x)\ (\pm y)}{100}$$

- ஒரு பொருளின் விலை $x\%$ அதிகரித்த பின்பு மறுபடியும் $x\%$ குறைந்தால் நஷ்டசதவீதம் $= \left(\frac{x}{10}\right)^2$
- ஒரு நகரின் மக்கள் தொகையானது ஒவ்வொரு ஆண்டும் $R\%$ அதிகமானாலோ அல்லது குறைந்தாலோ
  - $n$ வருடங்களுக்கு பிறகு மக்கள் தொகை $= P\left(1 \pm \frac{R}{100}\right)^n$
  - $n$ வருடங்களுக்கு முன்பு மக்கள் தொகை $= \frac{P}{\left(1 \pm \frac{R}{100}\right)^n}$
- ஒரு நகரின் மக்கள் தொகையானது $P$ என்க. மேலும் முதல் மூன்று வருடங்களுக்கு மக்கள் தொகை குறைவு அல்லது அதிகரிப்பு சதவீதமானது $R_1\%,\ R_2\%,\ R_3\%,$ எனில் 3 வருடங்களுக்கு பிறகு மக்கள் தொகை

$$= P\left(1 \pm \frac{R_1}{100}\right)\left(1 \pm \frac{R_2}{100}\right)\left(1 \pm \frac{R_3}{100}\right)$$

- ஒரு தேர்வில் மொத்த மாணவர்களில் $x\%$ மாணவர்கள் $'A'$ பாடப்பிரிவில் தோல்வியடைகின்றனர். $y\%$ மாணவர்கள் $'B'$ பாடப்பிரிவில் தோல்வியடைகின்றனர் மற்றும் இருபாடப்பிரிவுகளிலும் $z\%$ மாணவர்கள் தோல்வியடைகின்றனர் எனில் இருபாடப்பிரிவுகளிலும் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் %

$$= [100 - (x + y - z)]\%$$

- இருவர்க்கு இடையே நடத்தப்பட்ட ஒரு தேர்தலில் ஒருவர் மொத்த வாக்குகளில் $x\%$ பெற்று $y$ வாக்குகள் வித்தியாசத்தில்
  - வெற்றி பெறுகிறார் எனில்

    மொத்த வாக்குகள் எண்ணிக்கை $= \frac{100 \times y}{2x - 100}$
  - தோலவியடைகிறார் எனில்
    - மொத்த வாக்குகள் எண்ணிக்கை $= \frac{100 \times y}{100 - 2x}$

## 5.லாபமும் நஷ்டமும் மற்றும் தள்ளுபடி (Profit and Loss & Discount)

- ✓ லாபம் = விற்றவிலை – அடக்கவிலை
- ✓ நஷ்டம் = அடக்கவிலை – விற்றவிலை
- ✓ லாப சதவீதம் $= \frac{\text{லாபம்}}{\text{அடக்கவிலை}} \times 100$
- ✓ நஷ்ட சதவீதம் $= \frac{\text{நஷ்டம்}}{\text{அடக்கவிலை}} \times 100$
- ✓ அடக்கவிலை $= \frac{100}{100 + \text{லாப}\,\%} \times \text{விற்றவிலை}$
- ✓ அடக்கவிலை $= \frac{100}{100 - \text{நஷ்ட}\,\%} \times \text{விற்றவிலை}$
- ✓ விற்றவிலை $= \frac{100 + \text{லாப}\,\%}{100} \times \text{அடக்கவிலை}$
- ✓ விற்றவிலை $= \frac{100 - \text{நஷ்ட}\,\%}{100} \times \text{அடக்கவிலை}$

- ஒரு நபர் இரு பொருட்களை தனித்தனியே ஒரே விலைக்கு விற்கும்போது ஒரு பொருளுக்கு $x\%$ லாபத்தையும், மற்றொரு பொருளுக்கு $x\%$ நஷ்டத்தையும் பெறுகிறார். எனில் அவர் வியாபாரத்தில் அடைந்த நஷ்ட சதவீதம்

$$= \left(\frac{x}{10}\right)^2$$

- $'a'$ பொருட்களின் அடக்கவிலையானது $'b'$ பொருட்களின் விற்றவிலைக்கு சமம் எனில்
  - ✓ $(a > b)$ லாப % $= \frac{a-b}{b} \times 100$
  - ✓ $a < b)$ நஷ்ட % $= \frac{b-a}{b} \times 100$
- ஒருவர் $a$பொருட்களை ரூ$x$ விலைக்கு வாங்கி $b$ பொருட்களை ரூ.$y$ விலைக்கு விற்றால் லாப (அ) நஷ்ட சதவீதம்

  $\Rightarrow\left(\frac{ay-bx}{bx} \times 100\right)$
- குறித்தவிலை $\Rightarrow$ அடக்க விலை + கூட்டப்பட்ட மதிப்பு
- தள்ளுபடி $\Rightarrow$ குறித்தவிலை − விற்றவிலை
- தள்ளுபடி % $\Rightarrow \frac{\text{தள்ளுபடி}}{\text{குறித்தவிலை}} \times 100$
- குறித்த விலை$\Rightarrow \frac{100+\text{லாப }\%}{100-\text{தள்ளுபடி }\%} \times$ அடக்கவிலை
- ஒரு பொருளின் மீது கொடுக்கப்படும் தொடர் தள்ளுபடிகள் $p\%, q\%, r\%$ எனில், தள்ளுபடிக்கு பிறகு அந்தப் பொருளின் விற்றவிலை$\Rightarrow$குறித்தவிலை $\times \frac{(100-p)}{100} \times \frac{(100-q)}{100} \times \frac{(100-r)}{100}$

# 6.சராசரி (Average)

$$\text{சராசரி} = \frac{\text{கொடுக்கப்பட்டஎண்களின்கூடுதல்}}{\text{கொடுக்கப்பட்டஎண்களின்எண்ணிக்கை}}$$

1. **கூட்டுச்சராசரி: (Arithmetic Mean)**

   ✓ $\bar{x} = \frac{x_1+x_2+\cdots+x_n}{n}$

2. **பெருக்குச் சராசரி: (Geometric Mean)**

   ✓ $\sqrt{xy}$

3. **இசைச்சராசரி: (Harmonic Mean)**

   ✓ $H = \frac{n}{\frac{1}{x_1}+\frac{1}{x_2}+\cdots+\frac{1}{x_n}}$

4. **இரு எண்களின் இசைச் சராசரி:**

   ✓ $= \frac{2xy}{x+y}$

5. **இரு எண்களின் கூடுதல்:**

   ✓ $\frac{2\times(\text{பெருக்குச்சராசரி})^2}{\text{இசைச்சராசரி}}$

6. **முதல் $n$ இயல் எண்களின் சராசரி:**

   ✓ $\frac{n+1}{2}$

7. **முதல் $n$ இயல் எண்களின் வர்க்கங்களின் சராசரி:**

   ✓ $\frac{(n+1)\,(2n+1)}{6}$

8. **முதல் $n$ ஒற்றைப்படை இயல் எண்களின் சராசரி:**

   ✓ $n$

9. **முதல் $n$ இரட்டைப்படை இயல் எண்களின் சராசரி:**

   ✓ $n+1$

10. $1+3+5+\cdots+l$ **ன் சராசரி:**

    ✓ $\frac{l+1}{2}$

11. $2+4+6+\cdots+l$ **ன் சராசரி:**

    ✓ $\frac{l+2}{2}$

12. ஓர் எண்ணின் n மடங்குகளின் சராசரி:

✓ $\frac{\text{எண்} \times (n+1)}{2}$

13. அடுத்தடுத்த எண்களின் சராசரி:

✓ $\frac{\text{முதல்எண்} + \text{கடைசிஎண்}}{2}$

14. $x$ நபர்களின் சராசரியானது $a$, $y$ நபர்களின் சராசரியானது $b$ எனில் மொத்த நபர்களின் சராசரி:

✓ $\frac{ax+by}{x+y}$

15. ஒரு குறிப்பிட்ட தூரத்தை $x$ வேகத்தில் சென்றடைந்து பின் மீண்டும் அதே இடத்திற்கு $y$ வேகத்தில் திரும்பினால் சராசரி வேகம்:

✓ $\frac{2xy}{x+y}$

16. ஒரு நபர் 3 சமதூரங்களை $A\frac{km}{hr}$, $B\frac{km}{hr}$, $C\frac{km}{hr}$ என்ற வேகங்களில் கடக்கிறார், எனில் இந்த பயணத்தில் இவரது சரசரி வேகம்:

✓ $\frac{3ABC}{AB+BC+CA}$

17. ஒரு நபர் $P$ தூரத்தை $x$வேகத்திலும், $Q$ தூரத்தை $y$ வேகத்திலும், $R$ தூரத்தை $z$ வேகத்திலும் கடக்கிறார்,எனில் மொத்த பயணத்தில் இவரது சராசரி வேகம்:

✓ $\frac{P+Q+R}{\frac{P}{x}+\frac{Q}{y}+\frac{R}{z}}$

## 7.விகிதம் மற்றும் விகிதசமம் (Ratio and Proportion)

**விகிதம் (Ratio):**

- $a, b$ என்ற இரு அளவுகளின் விகிதம் $a:b$.
- $a:b$ என்பதை $\frac{a}{b}$ எனலாம்

**விகிதசமம் (Proportion):**

- இரு விகிதங்களின் எளிய வடிவம் சமமாக இருக்கும் எனில் அவ்விகிதங்கள் விகிதசமம் ஆகும்.
- $a, b, c, d$ ஆகியன விகிதசமத்தில் அமையும் எனில்,

$$a:b::c:d \quad (or)\, a:b = c:d$$

கடை உறுப்புகளின் பெருக்கல்= இடை உறுப்புகளின் பெருக்கல்

$$a \times b = b \times c$$

- இவ்வாறு இருந்தால் மட்டுமே இரு விகிதங்கள் விகித சமத்தில் அமையும்.

**3வது விகிதசமன் (3rd Proportional):**

$$\Rightarrow a:b::b:c$$

- இங்கு $c$ என்பது $a, b$ க்கு 3 வது விகித சமன்.

$$\Rightarrow a \times c = b \times b \quad = \quad c = \frac{b^2}{a}$$

**4வது விகிதசமன் (4th Proportional):**

$$\Rightarrow a:b::c:d$$

- இங்கு $d$ என்பது $a, b, c$ க்கு 4வது விகித சமன்.

  $\Rightarrow d = \frac{bc}{a}$

**இடைவிகிதசமன் (Mean Proportion):**

$\Rightarrow c = \sqrt{ab}$

- $c$ என்பது $a$ மற்றும் $b$ க்கு இடையேயுள்ள இடைவிகிதசமன். இதனை சராசரி விகிதசமன் எனவும் அழைப்பர்.

**கூட்டு விகிதம் (Compound Ratio):**

- $(a: b)$, $(c: d)$, $(e: f)$என்ற 3 விகிதங்களின் கூட்டு விகிதம்:

  $\Rightarrow (ace) : (bdf)$

**இருபடி விகிதம் (Duplicate Ratio):**

- $a: b$ ன் இருபடி விகிதம் $\Rightarrow a^2: b^2$

**துணை இருபடி விகிதம் (Sub-Duplicate Ratio):**

- $a: b$ன் துணை இருபடி விகிதம் $\Rightarrow \sqrt{a} : \sqrt{b}$

**முப்படி விகிதம் மற்றும் துணை முப்படி விகிதம்:**

- $a: b$ ன் முப்படி விகிதம் $\Rightarrow a^3: b^3$
- $a: b$ ன் துணை முப்படி விகிதம் $\Rightarrow \sqrt[3]{a} : \sqrt[3]{b}$

**தலைகீழ் விகிதம் (Inverse Ratio):**

- $a: b$ ன் தலைகீழ் விகிதம் $\Rightarrow b: a$

## 8.தனிவட்டி (Simple Interest):

1. $SI = \frac{PNR}{100}$

   இங்கு $SI$ ➡ தனிவட்டி,$P$ ➡ அசல்,$N$ ➡ காலம்,$R$ ➡ வட்டிவீதம்
2. $A = P\left(1 + \frac{NR}{100}\right)$

   இங்கு $A$ ➡ தொகை
3. ஒரு தொகையில் தனிவடடி அசலைப் போல் $\frac{SI}{P}$ பங்கு, மேலும் காலமும் வட்டிவீதமும் சமம் எனில்,

   $\Rightarrow$காலம் $(n) =$ வட்டிவீதம் $(R\%) = \sqrt{\frac{SI}{p} \times 100}$
4. ஒரு குறிப்பிட்ட தொகை $N$ வருடங்களில் $R\%$ வட்டிவீதத்தில்
   - ☑ இருமடங்காக மாறும் எனில் $\Rightarrow NR = 100$
   - ☑ மும்மடங்காக மாறும் எனில் $\Rightarrow NR = 200$
   - ☑ 4 மடங்காக மாறும் எனில் $\Rightarrow NR = 300$
5. ஒரு தொகை தனிவட்டி வீதத்தில் $x$ மடங்காக மாற $n$ வருடங்கள் ஆகிறது. எனில் $y$ மடங்காக மாற,
   - ✓ $\frac{y-1}{x-1} \times n$ வருடங்கள் ஆகும்.

## 9.கூட்டுவட்டி (Compound Interest)

1. ஒரு வருட வட்டி காண $\Rightarrow$ தொகை $A = P\left[1 + \frac{R}{100}\right]^n$
2. அரை வருட வட்டி காண $\Rightarrow$தொகை $A = P\left[1 + \frac{\frac{R}{2}}{100}\right]^{2n}$
3. கால் வருட வட்டி காண $\Rightarrow$தொகை $A = P\left[1 + \frac{\frac{R}{4}}{100}\right]^{4n}$

4. $n$ ஆண்டுகள், $x$ மாதங்கள் கூட்டுவட்டி காண

$$\Rightarrow \text{தொகை} A = P\left[\left(1+\frac{R}{100}\right)^n\left(1+\frac{\frac{x}{12}\times R}{100}\right)\right]$$

**கூட்டுவட்டி காண எளியமுறை:**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 வருடங்கள் எனில் | 2 | 1 | | | | |
| 3 வருடங்கள் எனில் | 3 | 3 | 1 | | | |
| 4 வருடங்கள் எனில் | 4 | 6 | 4 | 1 | | |
| 5 வருடங்கள் எனில் | 5 | 10 | 10 | 5 | 1 | |
| 6 வருடங்கள் எனில் | 6 | 15 | 20 | 15 | 6 | 1 |

5. ஒவ்வொரு வருடமும் வட்டிவீதம் $R_1\%$, $R_2\%$, $R_3\%$ என மாறுகிறது எனில்:

$$\Rightarrow A = P\left[1+\frac{R_1}{100}\right]\left[1+\frac{R_2}{100}\right]\left[1+\frac{R_3}{100}\right]$$

6. தனி வட்டிக்கும் கூட்டுவட்டிக்கும் இடையேயுள்ள வித்தியாசம்

- 2 வருடங்களுக்கு எனில் $D = P\left(\frac{R}{100}\right)^2$
- 3 வருடங்களுக்கு எனில் $D = P\left(\frac{R}{100}\right)^2\left(3+\frac{R}{100}\right)$

7. ஒரு குறிப்பிட்ட தொகை கூட்டு வட்டியில் $y$ வருடங்களில் $x$ மடங்காகிறது எனில் $(x)^n$ மடங்காக மாற $ny$ வருடங்கள் ஆகும்.

**எளியமுறை:**

| | | | |
|---|---|---|---|
| 2 வருடங்களில் 9 மடங்கு | ➡ | $(3)^2$ | $\therefore r = 200\%$ |
| 3 வருடங்களில் 8 மடங்கு | ➡ | $(2)^3$ | $\therefore r = 100\%$ |
| 4 வருடங்களில் 256 மடங்கு | ➡ | $(4)^4$ | $\therefore r = 300\%$ |

**தொடர்வைப்புத் தொகை (Recurring Deposit):**

- வட்டி வீதம் $r\%$ க்கு மாதந்தோறும் செலுத்தும் அசல் தொகை ரூ. $p$ ஐ $n$ மாதங்களுக்கு செலுத்தினால் வட்டி $= \frac{pNr}{100}$
- இங்கு $N \Rightarrow$ தொடர் வைப்பு காலம்

$$\Rightarrow N = \frac{1}{12}\left[\frac{n(n+1)}{2}\right]$$

- மாதத் தவனை $= \frac{\text{மொத்தத்தொகை}}{\text{மொத்தமாதங்கள்}}$

# 10.நேரமும் வேலையும் (Time and Work)

1) $\frac{\text{ஆட்கள்} \times \text{நாட்கள்} \times \text{மணிநேரம்}}{\text{வேலை} \times \text{பணம்}} = \frac{\text{ஆட்கள்} \times \text{நாட்கள்} \times \text{மணிநேரம்}}{\text{வேலை} \times \text{பணம்}}$

2) ஒரு வேலையை $A$ என்பவர் $D_1$ நாட்களிலும், $B$ என்பவர் $D_2$ நாட்களிலும் முடித்தால் இருவரும் சேர்ந்து அவ்வேலையை முடிக்க ஆகும் நாட்கள்

$$= \frac{D_1 \times D_2}{D_1 + D_2}$$

3) $A$ யும் $B$ யும் சேர்ந்து ஒரு வேலையை $D$ நாட்களில் முடிக்கிறார்கள். $A$ மட்டும் அவ்வேலையை தனியாக $D_1$ நாட்களில் முடித்தால் $B$ மட்டும் தனியாக அவ்வேலையை முடிக்க ஆகும் நாட்கள்

$$= \frac{D \times D_1}{D_1 - D}$$

4) $A, B, C$ என்ற மூவரும் ஒரு வேலையை தனித்தனியாக $D_1$, $D_2$, and $D_3$ நாட்களில் முடித்தால் மூன்று நபர்களும் சேர்ந்து அவ்வேலையை முடிக்க ஆகும் நாட்கள்

$$= \frac{D_1 \times D_2 \times D_3}{D_1D_2 + D_2D_3 + D_3D_1}$$

5) $A$யும் $B$ யும் சேர்ந்து ஒரு வேலையை $x$ நாட்களிலும் $B$ யும் $C$ யும் சேர்ந்து அவ்வேலையை $y$ நாட்களிலும்,$C$ யும் $A$ யும் சேர்ந்து அவ்வேலையை $z$ நாட்களிலம் முடித்தால் மூவரும் சேர்ந்து அவ்வேலையை முடிக்க தேவைப்படும் நாட்கள்

$$= \frac{2xyz}{xy + yz + zx}$$

6) $A$ என்பவர்$B$ ஐ விட $'n'$ மடங்கு திறமையானவர் எனில்

$$\Rightarrow A : B = 1 : n$$

7) நாள் விகிதம் $= A : B$ எனில் திறன் விகிதம் $= B : A$

## 11.குழாயும், தண்ணீர் தொட்டியும் (Pipes and Cisterns)

1) ஒரு தொட்டியை ஒரு குழாய் $A$ மணி நேரத்திலும், மற்றொரு குழாய் $B$ மணி நேரத்திலும் நிரப்பினால் இரண்டும் சேர்ந்து தொட்டியை நிரப்ப ஆகும் காலம்

✓ $= \frac{A \times B}{A + B}$

2) ஒரு தொட்டியை ஒரு குழாய் $A$ மணி நேரத்தில் நிரப்பும். மற்றொரு குழாய் $B$ மணிநேரத்தில் தொட்டியை காலி செய்யும் இரண்டும் ஒரே நேரத்தில் திறக்கப்பட்டால் தொட்டி நிரம்ப ஆகும் காலம்

✓ $= \frac{A \times B}{B - A}$

3) ஒரு தொட்டியை ஒரு குழாய் $A$ மணி நேரத்திலும், மற்றொரு குழாய் $B$ மணிநேரத்திலும், மூன்றாவது குழாய் $C$ மணி நேரத்திலும் நிரப்பினால் மூன்றும் சேர்ந்து நிரப்ப ஆகும் காலம்


✓ $= \frac{ABC}{AB + BC + CA}$

4) ஒரு தொட்டியை ஒரு குழாய் $A$ மணி நேரத்திலும், மற்றொரு குழாய் $B$ மணி நேரத்திலும் நிரப்பும். மூன்றாவது குழாய் $C$ மணி நேரத்தில் முழு தொட்டியையும் காலி செய்யும். மூன்றும் ஒரே நேரத்தில் திறக்கப்பட்டால் தொட்டி நிரம்ப ஆகும் காலம்

✓ $= \frac{ABC}{BC + CA - AB}$

## 12.காலம், தூரம் மற்றும் வேகம் (Time, Distance and Speed)

- தூரம் = நேரம் × வேகம்
- வேகம் $= \frac{\text{தூரம்}}{\text{நேரம்}}$
- நேரம் $= \frac{\text{தூரம்}}{\text{வேகம்}}$
- எளிய முறை:
  - D = S ×T
  - S = D/T, T = D/S




- இரண்டு இரயில்களின் வேகங்களின் விகிதம் $x : y$ எனில் சமதூரத்தை கடக்கும்போது நேரங்களின் விகிதம்

$$= \frac{1}{x} : \frac{1}{y} \quad (or) \quad y : x$$

- $1\ kmph = \frac{5}{18}\ m/s$

- $1\ m/s \quad = \frac{18}{5}\ kmph$
- ஒரு இரயில் வண்டி $A$ யிலிருந்து $B$ க்கு $x\ kmph$ வேகத்திலும் பின்பு $B$ யிலிருந்து $A$ க்கு $y\ kmph$ வேகத்திலும் பயணம் அடைந்தால் சராசரி வேகம்

$$= \frac{2xy}{x+y}\ kmph$$

- இரண்டு இரயில்கள் ஒரே திசையில் சென்று கொண்டிருந்தால் அதன் சராசரி வேகம்

$$= x - y$$

- இரண்டு இரயில்கள் வெவ்வேறு திசையில் (எதிர் எதிர் திசையில்) பயணித்தால் அதன் சராசரி வேகம்

$$= x + y$$

- ஒரு இரயில் ஒரு மணிதரையோ, மரத்தையோ, மின்சார கம்பத்தினையோ கடந்தால்

  ⇒தூரம் = இரயிலின் நீளம்

- ஒரு ரயில் வண்டி ஒரு பாலத்தினை கடந்து சென்றால்

  ⇒தூரம் = ரயிலின் நீளம் + பாலத்தின் நீளம்

- ஒரு ரயில் வண்டி நடைபாதையை கடந்து சென்றால்

  ⇒தூரம் = ரயிலின் நீளம் + நடைபாதையின் நீளம்

- ஒரு ரயில் வண்டி மற்றொரு ரயில் வண்டியை கடந்து சென்றால்

  ⇒தூரம் = முதல் ரயிலின் நீளம் + இரண்டாவது ரயிலின் நீளம்

- நீரில் படகின் வேகம் $= x\ kmph$, ஓடையின் வேகம் $= y\ kmph$ எனல்

I. கீழ்நிலையில் படகின் வேகம் $= (x + y)\ \ kmph$

**(Speed of Boat in Low Stream)**

II. எதிர்நீச்சில் படகின் வேகம் $= (x - y)\ \ kmph$

**(Speed of Boat in Up Stream)**

III. நிலையான நீரில் படகின் வேகம் $= \frac{1}{2}$ (கீழ்நிலை + எதிர் நீச்சு)

**(Speed of Boat in Still Water)**

IV. ஓடையின் வேகம் $= \frac{1}{2}$ (கீழ்நிலை − எதிர்நீச்சு)

**(Speed of Stream)**

# 13.வயது கணக்கீடுகள் (Problems on Age)

I. நடப்பு வயது $a$ என்றால் $n$ மடங்கு வயது $= na$

II. வயதுகள் விகிதம் $a{:}b$ என்றால் வயதுகள் முறையே $= ax$ மற்றும் $bx$








III. இருவரின் தற்போதைய வயது விகிதம் $x{:}y$. எனில் $n$ வருடங்களுக்கு முன்பு வயது விகிதமானது.




✓ $\frac{x-n}{y-n}$




IV. இருவரின் தற்போதைய வயது விகிதம் $x{:}y$ எனில் $n$ வருடங்களுக்கு பின்பு வயது விகிதமானது.



✓ $\frac{x+n}{y+n}$



# 14.அளவியல் (Mensuration)



| வ. எண் | உருவத்தின் பெயர் | உருவம் | பரப்பளவு (A) சதுர அலகுகள் | சுற்றளவு (P) அலகுகள் |
|---|---|---|---|---|
| 1. | முக்கோணம் |  | $\frac{1}{2} \times b \times h$ | AB + BC + CA |
| 2. | செங்கோண முக்கோணம் |  | $\frac{1}{2} \times b \times h$ | (அடிப்பக்கம் + உயரம் + கர்ணம்) |
| 3. | சமபக்க முக்கோணம் |  | $\frac{\sqrt{3}}{4} a^2$ ($\sqrt{3} \simeq 1.732$) | AB+BC+CA = $3a$ ; செங்குத்து, $h = \frac{\sqrt{3}}{2} a$ அலகுகள் |
| 4. | இரு சம பக்க முக்கோணம் |  | $h \times \sqrt{a^2 - h^2}$ | $2a + 2\sqrt{a^2 - h^2}$ |
| 5. | அசம பக்க முக்கோணம் |  | $\sqrt{s(s-a)(s-b)(s-c)}$ $s = \frac{a+b+c}{2}$ | AB + BC + CA $= 2S = (a + b + c)$ |
| 6. | நாற்கரம் |  | $\frac{1}{2} \times d \times (h_1 + h_2)$ | AB + BC + CD + DA |
| 7. | இணைகரம் |  | $b \times h$ | $2 \times (a + b)$ |
| 8. | செவ்வகம் |  | $l \times b$ | $2 \times (l + b)$ |
| 9. | சரிவகம் |  | $\frac{1}{2} \times h \times (a+b)$ | AB + BC + CD + DA |
| 10. | சாய்சதுரம் |  | $d_1, d_2$ ஆகியன மூலை விட்டங்கள் எனில் பரப்பளவு $\frac{1}{2} \times d_1 \times d_2$ | $4a$ |
| 11. | சதுரம் |  | $a^2$ | $4a$ |


| படம் | பரப்பளவு | சூத்திரம் |
|---|---|---|
|   சரிவகம் | $\frac{1}{2} \times$ உயரம் $\times$ இணைப்பக்கங்களின் கூடுதல் | $\frac{1}{2} \times h \times (a + b)$ ச. அலகுகள் |
|   வட்டம் | வட்டத்தின் சுற்றளவு = $2 \times \pi \times$ ஆரம் | $2\pi r$ அலகுகள் |
| | வட்டத்தின் பரப்பளவு = $\pi \times$ ஆரம் $\times$ ஆரம் | $\pi r^2$ ச. அலகுகள் |
|  செவ்வகப் பாதை | i) செவ்வகப்பாதையின் பரப்பளவு | வெளிச் செவ்வகத்தின் பரப்பளவு − உள் செவ்வகத்தின் பரப்பளவு |
|   வட்டப் பாதை | ii) வட்டப்பாதையின் பரப்பளவு = வெளிவட்டத்தின் பரப்பளவு − உள்வட்டத்தின் பரப்பளவு | $\pi (R^2 - r^2)$ ச. அலகுகள் (அல்லது) $\pi (R + r)(R - r)$ ச. அலகுகள் |

| படம் | பரப்பளவு | சூத்திரம் |
|---|---|---|
| <br>முக்கோணம் | $\frac{1}{2}$ × அடிப்பக்கம் × உயரம் | $\frac{1}{2} \times b \times h$ ச. அலகுகள் |
| <br>நாற்கரம் | $\frac{1}{2}$ × மூலைவிட்டம் × (எதிர்ப்பக்கத்திலிருந்து மூலைவிட்டத்திற்கு வரையப்படும் செங்குத்து தூரங்களின் கூடுதல்) | $\frac{1}{2} \times d \times (h_1 + h_2)$ ச. அலகுகள் |
| <br>இணைகரம் | அடிப்பக்கம் × அதற்கேற்ற குத்துயரம் | $bh$ ச. அலகுகள் |
| <br>சாய்சதுரம் | $\frac{1}{2}$ × மூலைவிட்டங்களின் பெருக்கற் பலன் | $\frac{1}{2} \times d_1 \times d_2$ ச. அலகுகள் |


| வ.எண் | வடிவம் (Figure) | வளைபரப்பு(Curved Surface Area) | மொத்தபரப்பு(Total surface area) | கன அளவு(Volume) |
|---|---|---|---|---|
| 1 | **உருளை - Cylinder**   | $2\pi rh$ | $2\pi r(h+r)$ | $\pi r^2 h$ |
| 2 | **கூம்பு - Cone**   | $\pi rl$ <br> சாயுயரம் $l = \sqrt{h^2+r^2}$ | $\pi r(l+r)$ | $\frac{1}{3}\pi r^2 h$ |

| | | | | |
|---|---|---|---|---|
| **3** | **கோளம் - Sphere**  | — | $4\pi r^2$ | $\frac{4}{3}\pi r^3$ |
| **4** | **அரைக்கோளம் -HemiSphere**   | $2\pi r^2$ | $3\pi r^2$ | $\frac{2}{3}\pi r^3$ |

| | | | | |
|---|---|---|---|---|
| **5** | **உள்ளீடற்ற உருளை –Hollow Cylinder**   | $2\pi h(R+r)$ | $2\pi h(R+r)+2\pi\,(R^2-r^2)$ | $\pi h\,(R^2-r^2)$ |
| **6** | **உள்ளீடற்ற கோளம் - Hollow Sphere**   | — | $4\pi(R^2+r^2)$ | $\frac{4}{3}\pi(R^3-r^3)$ |

| | | | | |
|---|---|---|---|---|
| **7** | **உள்ளீடற்ற அரைக்கோளம் - Hollow Hemi Sphere**  | $2\pi(R^2 + r^2)$ | $\pi\ (3R^2 + r^2)$ | $\frac{2}{3}\pi(R^3 - r^3)$ |

**வட்டகோணப்பகுதி (Sector):**




(i) **வட்ட கோணப்பகுதியின் வில்லின் நீளம்:**

$$l = \frac{\theta}{360} \times 2\pi r$$

(ii) **வட்ட கோணப்பகுதியின் பரப்பு:**

$$= \frac{\theta}{360} \times \pi r^2$$

(iii) **வட்ட கோணப்பகுதியின் பரப்புளவு:**

$$= \frac{lr}{2} \text{ச.அ}$$

(iv) **வட்ட கோணப்பகுதியின் சுற்றளவு:**

$$= l + 2r \text{ அலகுகள்}$$

# 15.நிகழ்தகவு (Probability)

1. நிகழ்தகவு $= \frac{\text{சாதாரண நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை}}{\text{மொத்த நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை}}$

   $$P(A) = \frac{n(A)}{n(S)}$$

2. $0 \leq P(A) \leq 1$
3. உறுதியான நிகழ்ச்சியில் நிகழ்தகவு $\Rightarrow P(A) = 1$
4. நடக்க இயலாத நிகழ்ச்சியின் நிகழ்தகவு $\Rightarrow P(\emptyset) = 0$
5. $A$ என்ற நிகழ்ச்சி நடைபெறாமல் இருப்பதற்கான நிகழ்தகவு $P(A^I) = P(\bar{A}) = 1 - P(A)$ மேலும் $P(A) + P(\bar{A}) = 1$

**கூட்டல் விதி:**

- $A$ யும் $B$ யும் ஒன்றையொன்று விலக்காத நிகழ்ச்சிகள் எனில்,
  - ✓ $P(A \cup B) = P(A) + P(B) - P(A \cap B)$
- $A$ யும் $B$ யும் ஒன்றையொன்று விலக்கும் நிகழ்ச்சிகள் எனில்,
  - ✓ $P(A \cup B) = P(A) + P(B)$ $(\because P(A \cap B) = 0$

**நாணயம் சுண்டப்படும் நிகழ்வு:**

I. ஒரு நாணயம் சுண்டப்படும் போது:
- ✓ $S = \{H, T\}$ இங்கு $H$ என்பது தலை $T$ என்பது பூ
- ✓ $n(A) = 2$

II. 2 நாணயங்கள் சுண்டப்படும் போது:
- ☑ $S = \{HH, HT, TH, TT\}$
- ☑ $n(S) = 4$

III. 3 நாணயங்கள் சுண்டப்படும் போது:
- ☑ $S = \{HHH, HTH, THH, TTH, HHT, HTT, THT, TTT\}$
- ☑ $n(S) = 8$

IV. $n$ நாணயங்கள் சுண்டப்படும் போது:
- ☑ $n(S) = 2^n$

**பகடை உருட்டப்படும் நிகழ்வு:**

I. ஒரு பகடை உருட்டும்போது:
- $S = \{1, 2, 3, 4, 5, 6\}$
- $n(S) = 6$

II. 2 பகடைகள் உருட்டப்படும் போது:
- $S = \{(1,1), (1,2), (1,3), (1,4), (1,5), (1,6), \dots\dots\ (6,6)\}$
- $n(S) = 36$

III. 3 பகடைகள் உருட்டுபோது:
- $n(S) = 216$

IV. $n$ பகடைகள் உருட்டும் போது:
- $n(S) = 6^n$

**சீட்டுகள் (Cards):**

I. ஒரு சீட்டுக்கட்டில் 52 சீட்டுகள் உள்ளன.

II. Clubs (or) Clover, Spades, Tiles (or) Diamonds, Hearts இவைகள் ஒவ்வொன்றிலும் 13 கார்டுகள் உள்ளன.

III. சீட்டுகட்டில் 4 Ace , 4 Jack, 4 Queen, 4 King கார்டுகள் உள்ளன.

IV. Face Cards எண்ணிக்கை = 12 (King, Queen, Jack)

V. Black Cards எண்ணிக்கை = 26

VI. Red Cards எண்ணிக்கை = 26

**சில எளியமுறை:**

I. Spade ஆக இருக்க நிகழ்தகவு
Heart ஆக இருக்க நிகழ்தகவு
Clover ஆக இருக்க நிகழ்தகவு
Dimond ஆக இருக்க நிகழ்தகவு } $\frac{1}{4}$

II. Red cards ஆக இருக்க நிகழ்தகவு
Black Cards ஆக இருக்க நிகழ்தகவு } $\frac{1}{2}$

III. King ஆக இருக்க நிகழ்தகவு
Queen ஆக இருக்க நிகழ்தகவு } $\frac{1}{13}$

IV. Black Queen ஆக இருக்க நிகழ்தகவு
Black King ஆக இருக்க நிகழ்தகவு
Red King ஆக இருக்க நிகழ்தகவு
Red Queen ஆக இருக்க நிகழ்தகவு } $\frac{1}{26}$

V. Face Cards ஆக இருக்க நிகழ்தகவு } $\frac{3}{13}$

**கிழமைகள் (Days):**

| | நிகழ்ச்சிகள் | லீப் ஆண்டு | சாதாரண ஆண்டு |
|---|---|---|---|
| I. | 53 வெள்ளிக்கிழமைகள் இருக்க நிகழ்தகவு(எந்தகிழமைகள்கேட்டாலும்) | $\frac{2}{7}$ | $\frac{1}{7}$ |
| II. | 52 வெள்ளிக்கிழமைகள் இருக்க நிகழ்தகவு (எந்த கிழமைகள் கேட்டாலும்) | $\frac{5}{7}$ | $\frac{6}{7}$ |

# 16.புள்ளியியல் (Statistics)

1. கூட்டுச்சராசரி **(Arithmetic Mean):**

➢ $$\bar{x} = \frac{x_1+x_2+x_3+\cdots \quad +x_n}{n}$$

2. இடைநிலை **(Median):**

கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை ஏறு (அ) இறங்கு வரிசையில் எழுதும் போது நடுநிலையாக இருக்கும் உறுப்பு.

3. முகடு **(Mode):**

புள்ளி விவரத்திலுள்ள உறுப்புகளில் அதிக முறை இடம் பெற்றுள்ள உறுப்பின் மதிப்பே முகடு எனப்படும்

4. முகடு = 3(இடைநிலை) – 2(சராசரி)
5. வீச்சு = பெரிய எண் - சிறிய எண்
6. வீச்சுக்கெழு = $\frac{L-S}{L+S}$

7. திட்ட விலக்கம் **(Standard Deviation):**

$$\text{(i) } \sigma = \sqrt{\frac{\sum(x-\bar{x})^2}{n}}$$

$$\text{(or)} \quad \sigma = \sqrt{\frac{\sum d^2}{n}} \quad (\therefore d = x - \bar{x})$$

(ii) $n$ உறுப்புகளின் திட்டவிலக்கம்:

$$\sigma = \sqrt{\frac{n^2-1}{12}}$$

8. மாறுபாட்டுக் கெழு **(Coefficient of Variation):**

- $C.V = \frac{\sigma}{\bar{x}} \times 100$
- $\sigma =$ திட்டவிலக்கம்
- $\bar{x} =$ கூட்டுச்சராசரி

9. விலக்க வர்க்கச் சராசரி = $\sigma^2$ (திட்டவிலக்கம்)$^2$

10. கால்மான விலக்கம் **(Fourth Quartile):**

$$= \frac{Q_3 - Q_1}{2}$$

11. கால்மான விலக்கக் கெழு **(Fourth Quartile Variation):**

$$= \frac{Q_3 - Q_1}{Q_3 + Q_1}$$

# 17.இயற்கணிதம் (Algebra)

**1.இருபடிச்சமன்பாடின் மூலங்களின் தன்மை:**

$ax^2 + bx + c = 0$ எனும் இருபடிச்சமன்பாட்டின் மூலங்கள்

$$x = \frac{-b \pm \sqrt{b^2 - 4ac}}{2a}$$

இங்கு $b^2 - 4ac$ என்பது இருபடிச் சமன்பாட்டின் தன்மைக்காட்டி

$(i) b^2 - 4ac > 0$ எனில் மூலங்கள் மெய் ,சமமில்லை

$(ii) b^2 - 4ac = 0$ எனில் மூலங்கள் மெய் ,சமம்

$(iii) b^2 - 4ac < 0$ எனில் மூலங்கள் கற்பனை

2. $ax^2 + bx + c = 0$ எனும் இருபடிச்சமன்பாட்டின் மூலங்கள் $\alpha$, $\beta$ எனில்

- மூலங்களின் கூடுதல் $\alpha + \beta = -\frac{b}{a}$
- பெருக்கல் பலன் $\alpha\beta = \frac{c}{a}$

3. $\alpha$ மற்றும் $\beta$ என்பன இருபடிச்சமன்பாட்டின் மூலங்கள் எனில்

- $(x-\alpha), (x-\beta)$ என்பன காரணிகள்.
- $(x-\alpha)(x-\beta) = 0$
- இருபடிச்சமன்பாடு $\Rightarrow x^2 - (\alpha+\beta)x + \alpha\beta = 0$

$x^2$ −( மூலங்களின் கூடுதல்) $x$+ (மூலங்களின் பெருக்கல்பலன்)=0

**இயற்கணித முற்றொருமைகள் (Algebra Formulae):**

1. $(a+b)^2 = a^2+b^2+2ab$
2. $(a-b)^2 = a^2+b^2-2ab$
3. $(a+b)^2-2ab = a^2+b^2$
4. $(a-b)^2+2ab = a^2+b^2$
5. $(a+b)^2+(a-b)^2 = 2(a^2+b^2)$
6. $(a+b)^2-(a-b)^2 = 4ab$
7. $(a+b)^2-4ab = (a-b)^2$
8. $(a-b)^2+4ab = (a+b)^2$
9. $(a+b)\,(a-b) = a^2-b^2$
10. $(a+b+c)^2 = a^2+b^2+c^2+2(ab+bc+ca)$
11. $(a+b)^3 = a^3+b^3+3ab\,(a+b)$
12. $(a+b)^3 = a^3+3\,a^2b+3ab^2+b^3$
13. $(a-b)^3 = a^3-b^3-3ab\,(a-b)$
14. $(a+b)^3 = a^3-3\,a^2b+3\square\,b^2-b^3$
15. $a^3+b^3 = (a+b)(a^2-ab+b^2)$
16. $a^3-b^3 = (a-b)(a^2+ab+b^2)$
17. $(x+a)\,(x+b) = x^2+(a+b)x+ab$
18. $(x+a)\,(x+b)(x+c) = x^3+(a+b+c)x^2+(ab+bc+ca)x+abc$
19. $a^3+b^3+c^3-3abc = (a+b+c)\,(a^2+b^2+c^2-ab-bc-ca)$

    If $a+b+c=0,\ then$

$$a^3+b^3+c^3-3abc = 0$$

$$or \qquad a^3+b^3+c^3 = 3abc$$

<u>மீ.பொ.வ மற்றும் மீ.சி.ம ஆகியவற்றுக்கு இடையேயுள்ள தொடர்பு</u>:

**இரு பல்லுறுப்புக்கோவைகளின் பெருக்கற்பலன் அவற்றின் மீ.பொ.வ மற்றும் மீ.சி.ம ஆகியவற்றின் பெருக்கற்பலனுக்குச் சமமாகும்.**

- f(x)×g(x)={ LCM (f(x) , g(x))} × { HCF (f(x) , g(x))}
- f(x), g(x) என்பன **இரு பல்லுறுப்புக்கோவைகள்**